மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தஞ்சையிலுள்ள காசிமடம், தமிழ்க் கல்வியை ஊக்குவிப்பதற்கென அறக்கட்டளை எதையும் 1970-71-ல் நிறுவவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : இந்த மடாதிபதிகள் தமிழ் அறிவை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு பக்திப் பாடல்களைக் கொண்ட வைதீக நூல்களைத்தான் பரப்புகிறார்கள். எனவே அவர்கள் அறிவியல் நூல்களையும் நல்ல பகுத்தறிவு நூல்களையும் வெளியிடுமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு நாம் கட்டளையிட இயலாது. அவர்கள் அவர்களது நெறியினைப் பின்பற்றியும், அவர்கள் விரும்புகிற அளவிலும்தான் அவர்களது பணியைச் செய்யமுடியும். ஆகவே அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

குத்தாலத்திற்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளி

* 329 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Over-head water tank for Lloyds road area.

* 330 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any over-head water tank has been put up in the Corporation Schools in Lloyds Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) சென்னை இலாயட்ஸ் சாலைப் பகுதியில் மேல் மட்ட நீர்த்தொட்டி கட்ட தகுதியான இடம் கிடைக்காததால், அப்பகுதி பொதுமக்கள் வசதிக்காக அங்குள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வரம்பிற்குள் சென்னை மாநகராட்சி நீர் வழங்கும் துறையினரால் ஒரு மேல் மட்ட நீர்த்தொட்டி கட்டப்பட்டுள்ளது.